வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 01.05.2025 வியாழக்கிழமை இதழ் : 122 பக்கங்கள் : 12

# இலங்கைக்கான பிணையெடுப்பு: விதிமுறைகளை திருத்தத் தயார்!

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு, மே 01

**அதிகரிக்கப்பட்ட வரிகளை அமெரிக்கா நடைமுறைப்படுத்தினால் அது இலங்கைக்கு மேலும் நெருக்கடியை அளிக்கும். இந்த நிலையில், இலங்கைக்கு உறுதியளித்த 290 கோடி டொலர்கள் பிணை எடுப்பு கடனின் விதிமுறைகளை திருத்தியமைக்க சர்வதேச நாணய நிதியம் முன்வந்துுளளது.**



பொருளாதார மந்த நிலையிலிருந்து மீள்வதற்கு போராடும் இலங்கையிலிருந்து இறக்குமதியாகும் ஆடைகள், இறப்பர் உள்ளிட்ட பொருட்களுக்கு அமெரிக்கா 44 சத வீத வரியை விதித்தது. அதிகரித்த இந்த வரி 90 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள் ளது. இந்த வரியை நீக்க இலங்கை அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர். எனினும், இது குறித்து எந்த பதிலும் அமெரிக்காவிடம் இருந்து கிடைக்கவில்லை.

இந்த நிலையில், அமெரிக்காவின் வரிகளால் தூண்டப்பட்ட உலகளாவிய வர்த்தகக் கொள்கை நிச்சயமற்ற தன்மைகள் இலங்கைக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஐ. எம். எவ்வின் இலங்கை விடயத்துக்கான தலைவர் இவான் பாபஜெயர்ஜியோ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

"இந்த அபாயங்கள் ஏற்பட்டால், அந்த பாதிப்புகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அதிகாரிகளுடன் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம். தற்போதுள்ள ஐ. எம். எவ். திட்டத்தின்

11

## டெங்கு நோயால் 6 பேர் உயிரிழப்பு

17,000 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 01

இந்த ஆண்டில் நிறைவடைந்த 4 மாதங்களில் 17 ஆயிரத்து 459 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 6 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 5 ஆயிரத்து 18 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில், 985 பேர் இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர். தவிர,

டெங்கு நோயால் மேல் மாகாணம் தொடர்ந்து அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது.

11



ஜீ.எஸ்.பி. பிளஸ் மீளாய்வு:

## இலங்கைக்கு சாதகமாக பரிசீலனை செய்யப்படும்

ஜனாதிபதியுடனான சந்திப்பில் உறுதியாம்

கொழும்பு, மே 01

ஜீ. எஸ். பி. பிளஸ் மீளாய்வு இலங்கைக்கு சாதகமான முறையில் கருத்தில் கொள்ளப்படும். அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ. எஸ். பி. பிளஸ் சலுகை தரப்படுத்தப்பட்ட - தரமான பொருட்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியா பிரிவுக்கான தலைவர் சார்ள்ஸ் வைட்லி தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

11

## அமெரிக்காவிடமிருந்து எரிசக்தி பொருட்கள்!

பிரதி நிதி அமைச்சர் சூசக தகவல்

கொழும்பு, மே 01

அமெரிக்காவிடமிருந்து எரிசக்தி பொருட்களை இலங்கை இறக்குமதி செய்யவுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் ஹர்சன சூரியபெரும சூசகமாக தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும், அமெரிக்க வர்த்தக அதிகாரிகள், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளில்

11

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை:

## மருத்துவர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், மே 01

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மருத்துவர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணி வரை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழை கிளை தெரிவித்துள்ளது.

11



## முஸ்லிம் சமூகத்தின் பிரச்னைகளில் அரசு உணர்வுபூர்வமாக இருக்கிறது!

அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, மே 01

முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து அரசாங்கம் உணர்வுபூர்வமாக இருக்கிறது. எந்தவொரு சமூகம் தொடர்பிலும் தீர்மானங்களை எடுக்கும்போது சம்பந்தப்பட்ட சமூகத்தின் கோரிக்கைகள் மற்றும் குரலுக்கு செவிசாய்ப்பது அரசாங்கத்தின்

11

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, மே 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரென் பெற்றோல் லீற்றருக்கு

11



அனைவருக்கும் உலக உழைப்பாளர் தின நல்வாழ்த்துகள்...!

## வடக்கு உட்பட பல இடங்களில் இன்று மே தின கூட்டங்கள்!

யாழ்ப்பாணம், மே 01

சர்வதேச உழைப்பாளர் தினமான இன்று வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறவுள்ளன. அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்களின் அழைப்பின் பேரில் இவை நடைபெறவுள்ளன.

11

## அக்ஷய திருதியையான நேற்று 500 ரூபாய்க்கு எகிறியது உப்பு!

வடமராட்சி, மே 01

அக்ஷய திருதியை தினமான நேற்று வடமராட்சியில் ஒரு கிலோ உப்பு 500 ரூபாய்க்கு விற்பனையானதாக தெரிய வருகின்றது.

அக்ஷய திருதியை தினத்தில் தங்கம் வாங்கினால் செல்வம் பெருகும் - அதிர்ஷ்டம்

11

## முன்னாள் அமைச்சர்கள் சிலர் விரைவில் கைதாவர்!

பிரதி அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், மே 01

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் முடிவடைந்த பின்னர் சில முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன என்று தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பல்கலை. துணைவேந்தர் தெரிவு: பேராசிரியர் பிரதீபன் முன்னிலையில்!

யாழ்ப்பாணம், மே 31

கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கிறார்.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட பேரவை கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து கிழக்கு பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்கள் உட்பட பதவிவழி உறுப்பினர்களும் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர்.

புள்ளிகளின் அடிப்படையில் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் முதல் நிலையிலும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் படி, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பல்கலைக்கழக சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து நியமனம் செய்வார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் பதவிக் காலம் கடந்த ஜனவரி 21 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் கடந்த வருடம் ஒக்ரோபர் 15ஆம் திகதி துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவைக் கூட்டம் நடாத்தப்பட்டு, முன்னணி பெற்ற மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா அந்த முடிவுகளை நிராகரித்து புதிதாகத் தெரிவை நடத்துமாறு கோரியிருந்தார்.

அத்துடன், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா பதவிக்கு வந்த பின்னர், ஜனாதிபதியால் கிழக்கு பல்கலைக்கழகத்துக்குத் துணைவேந்தராக எவரும் நியமிக்கப்படவில்லை. துணைவேந்தரின் பதவிக்காலம் முடிவுற்ற பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே பதில் துணைவேந்தர்களை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

# தொழிலாளர்களுக்கான உரிமைகள், அங்கீகாரத்தை அரசாங்கம் வழங்கும்!

## மே தினச் செய்தியில் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், மே 01

தொழிலாள தோழர்களுக்கு கிடைக்கவேண்டிய அத்தனை உரிமைகளையும் அங்கீகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் வழங்கும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

"இந்த உலகை இயக்கிக் கொண்டிருக்கும் - உலக மக்களை வாழ வைத்துக்கொண்டிருக்கும் அத்தனை தொழிலாள தோழர்களுக்கும் இந் நாளில் எனது புரட்சிகரமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று முதல் இன்று வரை எமது நாட்டில் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தொழிலாளர்கள் வழங்கிவரும் பங்களிப்பு அளப்பரியவை. எனவே, உடலாலும், அறிவாலும் உழைக்கிற எவருக்கும் எந்த இடத்திலும் அநீதி இழைக்க இடமளியோம். உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.

எமது நாட்டில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது உழைப்பை மட்டுமல்ல உயிரைக்கூட இந்நாட்டு மண்ணுக்காக உரமாக்கியுள்ளனர். எனவே, அம்மக்கள் தலை நிமிர்ந்து வாழக்கூடிய சூழலை நிச்சயம் நாம் உருவாக்குவோம். தோட்டக் காணிகளை தொழிலாளர் தோழர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

இதேபோல எமது கடற்றொழில் தொழிலாளர் தோழர்களுக்கும் பல்வேறு விடயங்களை நாம் செய்து வருகின்றோம். அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எமது ஆட்சியின் கீழ் உழைப்பாளர்களுக்கு எவ்விதத்திலும் அநீதி நடக்காது." - என்றுள்ளது. (ஐ)

# பசுமை இயக்கத்தின் மே தினம் நல்லூரில்!

யாழ்ப்பாணம், மே 01

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மே தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த உலக தொழிலாளர் தினப் பொதுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தொடக்கவுரை ஆற்றவுள்ளார்.

சமூக - அரசியல் செயல்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந. சிறிகாந்தா, சனநாயக தமிழரசு கட்சியின் தலைவர் கே.வி. தவராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினம் "சுற்றுச்சூழல் பாதுகாப்பே உழைப்புக்கான உத்தரவாதமும் எம் இருப்புக்கான உத்தரவாதமும் ஆகும். உள்ளூராட்சித் தேர்தலில் இவற்றை உறுதி செய்வோம்" என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

# கடைகளில் வாக்காளர் அட்டைகள் தபால் ஊழியர் உட்பட இருவர் கைது

வவுனியா, மே 01

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் ஒருதொகை வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆளும்கட்சி வேட்பாளர் ஒருவரின் சகோதரரும் தபால் ஊழியர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பூந்தோட்டம் பகுதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில் ஒருதொகை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் உள்ளன என்று தேர்தல்கள் திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைத்தது.

சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அங்கிருந்து ஒரு தொகை வாக்காளர் அட்டைகளை மீட்டனர்.

இந்த வாக்காளர் அட்டைகளை வைத்திருந்த குற்றத்துக்காக வியாபார நிலையத்தின் உரிமையாளரும் அந்தப் பகுதியின் தபால் நிலைய ஊழியரும் கைது செய் யப்பட்டனர்.

கைதான வியாபார நிலைய உரிமையாளரின் சகோதரர் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வவுனியா மாநகர சபைக்கு போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. கைதான இருவரும் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# உரிமைகளுக்காகவும் சமத்துவமான சமூகநல்வாழ்வுக்காகவும் இணைவோம்!

## மே தின அறிக்கையில் யாழ். பல்கலை. ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், மே 01

"உரிமைகளுக்காகவும் சமத்துவமான சமூக நல்வாழ்வுக்காகவும் ஒன்றிணைவோம்" என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது மே தின அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது.

இன்றைய மே தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

மே தினம் என்பது உலகம் முழுவதும் தொழிலாளர்களின் உரிமைக்குரல்கள், மற்றும் போராட்டங்களை நினைவு கூரும் நாள் மட்டுமல்ல அது எதிர்காலத்தை நோக்கி நியாயமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய கடமையையும் நினைவூட்டும் நாள். எனவே 2025 மே தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களாகிய நாம் இலங்கை ஆசிரியர் சங்கம், வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து உழைப்பாளர்களின் உரிமைகளையும் சமத்துவமான சமூக நல்வாழ்வையும் முன்னிறுத்தி நிற்கிறோம்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் நாங்கள் காலங்காலமாக அடக்குமுறைகளையும், சுரண்டல்களையும், புறக்கணிப்புகளையும், அழுத்தங்களையும் சந்தித்து வருகின்றோம். நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் ஒடுக்குமுறைகள் அதனால் ஏற்பட்ட வலிகள், போராட்டங்கள், இழப்புக்களுக்கு பின்னரும் வலிகளை மறக்கும்படியான எந்தவொரு மாற்றத்தையும், நியாயமான தீர்வையும் இன்றுவரை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மொழி உரிமை, நில உரிமை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், அரசியல் கைதிகள் விடயம், சட்ட ஆட்சி, தீர்வு வழங்கல், மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பன இன்னும் இங்கு எமது அவாக்களாகவும், எதிர்பார்ப்புகளாகவுமே காத்திருக்கின்றன. இவற்றை அடைய ஒரே கொள்கையுடன் அனைவரையும் ஓரணியில் ஒன்றுபடுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# காலத்தின் மாற்றங்களை உள்வாங்கி கூட்டுறவு துறை பயணிக்க வேண்டும்!

## வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 01

காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கி பயணித்தால்தான் முன்னோக்கிச் செல்ல முடியும் என்பதை கூட்டுறவுத் துறையினர் உணர்ந்து கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியீட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் அமைக்கப்பட்ட கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நவீன போத்தல்கள் அடைப்பு நிலைய திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இன்று உங்களின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்றுமதியாளர் தயாராக இருக்கின்றனர். நீங்களும் ஏற்றுமதியை நோக்கி உங்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உற்பத்தியாளர்களுக்கு தமது உற்பத்திப் பொருட்களுக்கு கூடிய விலை கிடைக்கும்போது தான் அவர்கள் அந்த உற்பத்தியை தொடர்ந்து முன்னெடுப்பார்கள். எனவே, நீங்களும் எதிர்காலத்தில் நவீன கருவிகளை உள்வாங்கி உங்கள் உற்பத்தியை அதிகரித்து அதன் ஊடாக உங்கள் ஒவ்வொருவரின் குடும்பங்களின் வாழ்வாதாரமும் மேம்பட வாழ்த்துகிறேன் - என்றார். (ஐ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
01.05.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மூன்றாவது வெற்றி

பிரதமர் ஹரிணி அமரசூரிய தாங்கள் மூன்றாவது வெற்றியைப் பெறுவது உறுதியானது என்று தெரிவித்திருக்கிறார். அவர் கூறுவது போன்று அதில், சிக்கல்கள் இருக்கப்போவதில்லை. ஏனெனில், எதிர்க் கட்சி மிகவும் மோசமான - கையறுநிலையில் இருக்கிறது. சஜித் பிரேம தாஸ ஓர் எதிர்க்கட்சித் தலைவர்தானா என்று கேட்கும் நிலை மையே காணப்படுகிறது. ரணிலால் எதுவும் முடியாது. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் இல்லை. சவால் இல்லாதபோது மூன்றாவது வெற்றிக்கு என்ன தடை இருக்கப் போகிறது?

தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில், இது அவர்களுக்கான இரண் டாவது வெற்றியாக அமையுமா அல்லது இல்லையா என்பதுதான் கேள்வி. தேசிய அளவில் உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் பெரியள வில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்னும் ஒரு கணிப்பு உண்டு. அது சரியாக இருந்தால் வாக்களிப்பில் வீழ்ச்சி ஏற்படலாம். அந்த வகையில் பாராளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்டது போன்று தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையான வாக்குகளைப் பெறுமா என்பது சந்கேகமே. ஆனால், நாட்டின் பெரும்பான்மையான சபைகளை தேசிய மக்கள் சக்திதான் கைப்பற்றும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றுக்கொண்டதுபோல் குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான மக்களின் ஆதரவை பெற்றுக் கொண்டது போல், உள்ளூராட்சி சபைகளிலும் வெற்றியை நிலைநாட்டுவார்களா என்பதுதான் கேள்வி. ஒருவேளை அவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டால் தமிழ்த் தேசியவாத கட்சிகள் தங்களின் கடைகளை மூடவேண்டிய நிலைமையே ஏற்படும்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ்க் கட்சிகளும் தங்களின் பிர சாரங்களை முன்னெடுத்து வருகின்றன. ஆனால், தமிழ் கட்சிகள் பல அணிகளாகப் போட்டியிடுவது - தங்களுக்குள் தொடர்ந்தும் யார் உத்த மர்கள் என்று மல்லுக்கட்டுவது போன்ற சூழல் தொடர்வதால், அது முன்னரைப் போன்றே தேசிய மக்கள் சக்திக்கு சாதகமாகவே இருக்கி றது. தமிழ்ச் சூழலில் தென்னிலங்கை கட்சியொன்று ஆதரவை பெறு கிறது என்றால் அதற்கு ஒரேயொரு காரணம்தான் இருக்க முடியும். அதாவது, தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை முறையாக - நேர்மையாக பிரதிநிதித்துவம் செய்யவில்லை. இதனைத் தவிர வேறு எந்த வொரு காரணமும் இருக்கப் போவதில்லை.

தங்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியொன்றை மக்கள் நிரா கரிக்க முற்படுகிறார்கள் என்றால் குறித்த கட்சி மக்களின் மனநிலையை சரியாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படவில்லை என்பது தான் காரணம். தங்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கு குறித்த கட் சிக்கு தகுதியிருக்கிறது என்று மக்கள் நம்பினால் பிறிதொரு கட்சியை நோக்கி ஒருபோதுமே செல்லமாட்டார்கள். இந்த விடயத்தைத்தான் தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். வெறுமனே சில சுலோ கங்களை எல்லாக் காலத்திலும் உச்சரிப்பதால் மக்களைத் தொடர்ந்தும் தங்களுடன் வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினால் அதனைப் போன்ற தவறு வேறு ஒன்றுமில்லை.

றோயல் பார்க் கொலை:

## பொதுமன்னிப்பில் விடுதலையான ஜூட் ஷ்ரமந்த சிங்கப்பூரில் இல்லை!

கொழும்பு, மே. 01

றோயல் பார்க் கொலை வழக்கில் தண் டனை பெற்று பின்னர் ஜனாதிபதி பொது மன் னிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஜூட் ஷ்ர மந்த ஜயமஹா சிங்கப்பூரில் இல்லை என இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

ஜூட் ஷ்ரமந்த, பொதுமன்னிப்பில் விடு தலை செய்யப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் விசாரணையின்போது செவ்வாய்க்கிழமை இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அதிகாரிகள் ஜூட் ஷ்ரமந்தவை நாடு கடத்துமாறு சிங்கப்பூரிடம் கோரிய போதிலும், அவர் தங்கள் நாட்டில் இல்லை என்பதை சிங்கப்பூர் அதிகாரிகள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர் என சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டவாதி சஜித் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜூட் ஷ்ரமந்த தற்போது இருக்கும் இடத் தைக் கண்டறிய விசேட விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

நீதிமன்ற உத்தரவு வழங்கி சுமார் ஒரு வரு டம் கழித்தும் அவரைக் கண்டுபிடிப்பதில் முன்னேற்றம் இல்லாதது குறித்து நீதியரசர்க ளான எஸ். துரைராஜா, யசந்த கோடகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் அதிருப்தியை தெரிவித் துள்ளது.

ஜூட் ஷ்ரமந்த கைது செய்ய பிடியா ணையை பெற்றுக் கொள்வதற்கான முயற்சி கள் நடந்து வருவதாகவும், வழக்கின் மூலப் பத்திரத்தை மீட்டெடுப்பதில் ஏற்பட்ட சிக் கல்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டதாக வும் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

ஜூலை மாதம் 28 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படும், மேலும் வழக்கு விசாரணை முன்னேற் றத்தை அறிக்கையிட சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது. (அ)

## அரசிடம் வாகனங்களை கையளித்த நான்கு முன்னாள் ஜனாதிபதிகள்

கொழும்பு, மே. 01

முன்னாள் ஜனாதிபதிகள் ஐந்து பேரில் நான்கு பேர் தற்போது தங்களது மேலதிக வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவைத் தவிர, மற்ற அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயல கத்தின் மூத்த செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட மூன்று வாகனங்களில் ஒன்றைத் திருப்பித் தருமாறு ஜனாதிபதியின் செயலாளரின் எழுத்துபூர்வ அறிவிப்பின்படி இந்த வாகனங்கள் முன்னாள் ஜனாதிபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப் பட்ட வாகனத்தை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று ஏப்ரல் 19 ஆம் திகதி ஜனாதிபதி செயலாளர் கடிதம் அனுப்பி யிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜ பக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோருக்கு ஜனாதிபதி செயலாளரினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. (அ)

## மே தினத்தை முன்னிட்டு கொழும்பில் இன்று விசேட போக்குவரத்துத் திட்டம்

கொழும்பு, மே. 01


சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று விசேட பொலிஸ் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படும் என்று பொலிஸ் தலைமை யகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பல் வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு இந்தப் பாதுகாப்பு வழங்கப் படவுள்ளது.

அதன்படி, காலி முகத்தி டல், கெசல்வத்தை, ஆமர் வீதி, ஹைட் பார்க், தபால் அலுவலக தலைமையகம், நூலக கேட்போர் கூடம் வளாகம், விஹார மகா தேவி வெளிப்புற பூங்கா, கோஸ் கஸ் சந்தி உள்ளிட்ட பல பகுதிகளில் அரசியல் கூட் டங்கள் பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் பாது காப்பு மற்றும் விசேட போக்குவரத்து திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என பொலிஸார் அறிவித்துள் ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**இடபம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர் பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**மிதுனம்** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேலதிகாரிகளிடம் விவாதம் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்** பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**சிம்மம்** கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**கன்னி** கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். உறவினர்கள் மதிப்பார்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**துலாம்** சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்** சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**தனுசு** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**மகரம்** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனை நிறைவேறும். உறவினர்களின் அன்பு தொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கும்பம்** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மீனம்** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

# உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் யாழில் முன்னேற்றக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 01

எதிர்வரும் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பாக குழுக்களுக்கு பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான முன்னேற்றக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட கடமைகள் தொடர்பாகவும் அதன் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் தெரிவத்தாட்சி அலுவலரால் ஆராயப்பட்டது.

1. இதுவரை முறைப்பாடுப் பிரிவுக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கான நடவடிக்கைகளை கேட்டறிந்ததுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களின் மேலதிக ஆளணிகளையும் பெற்று இணைந்த வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

2. தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள பணியாட்களின் விவரங்கள் தொடர்பாகவும், களஞ்சிய செயல்பாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

3.போக்குவரத்து வசதிகள் தொடர்பாக ஆராய்ந்து, தேர்தல் கடமைக்காக தேவைப்படும் வாகனங்களை உரிய காலப் பகுதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

4. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமையவுள்ள மண்டப ஒழுங்குகள் தொடர்பாக ஆராயப்பட்டு, மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

5.உத்தியோகத்தர்களுக்கான நலனோம்பல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

6.பொது வசதிகள் குறிப்பாக குடிநீர், மலசல கூட வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

7.தேர்தல் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் ஒருங்கிணைப்பு செயல்பாடு தொடர்பாகவும் ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலரால் வழங்கப்பட்டன.

மேலும், இக் கலந்துரையாடலில் மேலதிக கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (எ-05)

# வட்டுக்கோட்டையில் சிறுமி துஷ்பிரயோகம் கைதான மேலும் இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 01

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் 14 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் மேலும் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமி கடந்த 3 ஆண்டுகளாக இவ்வாறு பாதிக்கப்பட்டு வந்த நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். இந்த நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக

மேலும், இரு ஆண்கள் கடந்த 27 ஆம் திகதி வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். கைது செய்யப்பட்ட இருவரும் 45 மற்றும் 52 வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-05)

# நரசிங்க வைரவர் ஆலயத்தில் தீ மிதிப்பு உற்சவம்

யாழ்ப்பாணம், மே 01

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன் திடற்புலம் அருள்மிகு சிறி நரசிங்க வைரவர் தேவஸ்தான வருடாந்த தீ மிதிப்பு உற்சவத்தை முன்னிட்டு தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 06. 00 மணி தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை காலை 06.30 மணி வரை சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நேர்முக வர்ணனை நடைபெறவுள்ளது. அந்த வகையில்

இன்று வியாழக்கிழமை சைவப்புலவர் செ. த. குமரன் மற்றும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனும் நாளை வெள்ளிக்கிழமை சைவப்புலவர் பொன். சந்திரவேலும் நேர்முக வர்ணனை நிகழ்த்துவர். (எ)

# அராலியில் திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 01

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -03 நாளை வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும், "திருநகரங் கண்ட படலம்" என்னும் தலைப்பில் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# சிறுப்பிட்டியில் குமாரசாமிக்குருக்கள் குருபூஜை

யாழ்ப்பாணம், மே 01

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிரீ பாலு. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சமயப்பெரியார்கள் குருபூஜை விழாவும் தொடர் - 01 சிவாகம ஞானபானு சிவசிறீ குமாரசாமிக்குருக்கள் குருபூஜை விழா சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறுப்பிட்டி ஞான வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு நடை பெறவுள்ளன. சமயஜோதி கதிர் காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்க மைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக கோப் பாய் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், கலா நிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். சிவாகம ஞான பானு சிவசிறீ. குமாரசாமிக் குருக்கள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும், "குமாரசாமிக்குருக்களும் சமயப்பணியும்" என்னும் தலைப்பில் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆன்மிக விருந்தினர் உரையைத் தொடர்ந்து குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பரில் முழுநாடும் ரணிலைத்தான் தேடும்!

## ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 01

**நாட்டில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரிசை யுகம் மீண்டும் தோற்றம் பெறும் எனவும், அப்போது முழு நாடும் ரணில் விக்கிரமசிங்கவை தேடும் எனவும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

தேர்தல் பிரசார கூட்ட மொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி உள்ளிட்ட ஆளுங்கட்சியினர் எதிர்க்கட் சித் தலைவரை விமர்சிப்ப தில்லை. அவர் அப்பதவியில் இருப்பதை ஆளுங்கட்சி விரும் புகின்றது. ஏனைய தலைவர் களையும் விமர்சிப்பதில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங் கவை இலக்குவைத்தே ஜனா திபதி உள்ளிட்டவர்கள் விமர் சனக் கணைகளைத் தொடுத் துவருகின்றனர்.

கிராமப் பகுதிகளில் உள்ள ஜே.வி.பியினரும் ரணிலையே விளாசித்தள்ளுகின்றனர். ஏனெ னில் ரணில் வந்துவிடுவார் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது.

மே மாதம் வரும்போது பொருளாதாரப் பிரச்னை தலைதூக்க ஆரம்பிக்கும். ஓகஸ்ட் மாதமளவில் அது உக்கிரமடையும். டிசெம்பர் மாதம் ஆகும்போது வரிசைகள் தோற்றம்பெறும்.

அப்போது தான் அறகலய வெடிக்கும். அப் போது நாட்டை மீட்டு, எங் களை பாதுகாக்கவும் என முழு நாடும் ரணிலிடம் கோரிக்கை விடுக் கும்-என்றார். (அ)

# தேர்தல் நிறைவடைந்த பின்னர் தொகுதிவாரியாக மக்கள் சபை!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, மே. 01

உள்ளூராட்சி மன்ற தேர்த லின் பின்னர் தொகுதிவாரியாக மக்கள் சபைகள் அமைக்கப் பட்டு அபிவிருத்தித் திட்டங் கள் கண்காணிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-நாட்டின் ஜனாதிபதியை யும் பாராளுமன்ற அதிகாரத் தையும் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிவிட்டு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை வேறு கட்சிகளுக்கு வழங்க முடியுமா? இல்லை.

கடந்த 75 வருடங்களாக செய்ய முடியாத விடயங்களை நாம் ஆறு மாதங்களில் செய்தி ருக்கிறோம். ஜனாதிபதி முதல் கடைநிலை ஊழியர்கள் வரை நாம் சலுகைகளை தவிர்த்து வருகிறோம்.

திருடர்களை கைது செய்து மக்கள் சொத்துகளை அவர்க ளிடமிருந்து பறிமுதல் செய்வ தாக உறுதியளித்தோம். அதன் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடன் ஒவ்வொரு தொகுதிக்கும் மக்கள் சபைகள் அமைக்கப்ப டும். அதனூடாக அபிவிருத்தித் திட்டங்கள் கண்காணிக்கப் படும்.

சபைகளுக்கு கிடைக்கும் நிதி எவ்வெந்த திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவேண்டும் என அந்த மக்கள் சபைகளில் கலந்துரையாடப்படும்-என் றார். (அ)

தேசிய மக்கள் சக்தியை விடுத்து

# மாற்றுக் கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும்

## கோருகிறார் ரணில்



கொழும்பு, மே. 01

தேசிய மக்கள் சக்தியினால் ஏமாற்றமடைந்தமையினால் வாக்களிப்பதை புறக்கணிக் காது மாற்றுக் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பா ளர்க ளுடன் காலியில் இடம் பெற்ற சந்திப்பில் அவர் இத னைக் குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-சில உள்ளூராட்சி மன் றங்களில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை கிடைக்காது.

ஏனைய கட்சிகள் இணை வதன் ஊடாகவே பெரும்பான் மையை பெறக்கூடிய நிலை உருவாகும். தேசிய மக்கள் சக்தி மீது கொண்டுள்ள நம்பிக் கையை வெளிப்படுத்துவதற்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை பயன்படுத்துமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 7 மாதங்களில் பல மாற் றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறுகிறார். எனினும் கிராம மக்களின் வாக்குகளை பொதுசன வாக்கெடுப்பாக மாற்றிக் கொள்வதற்கு ஜனா திபதி முயல்கிறார்-என்றார்.

# நாட்டை அநுரவிடம் ஒப்படைத்த மக்களுக்கு ஏமாற்றமே மிச்சம்!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 01

சுபநேரத்தில் நாட்டை அநு ரவிடம் ஒப்படைத்த மக்க ளுக்கு இன்று ஏமாற்றமே மிஞ் சியுள்ளதாக எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

மாவனல்லை நகரில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தற்போது மூன்றாவது தேர்தலை நாம் எதிர்கொண் டுள்ளோம்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்குகளைப் பதிவி டுவது தொடர்பில் தீர்மானங் களை எடுப்பதற்கு முன்னர், கடந்த இரண்டு தேர்தல்களி லும் அரசாங்கம் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதனைத் தெளிவாக நடைமு றைப்படுத்தியுள்ளது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

அரசியலில், பிரகடனப்ப டுத்தப்படுவதும் நடைமுறைப் படுத்தப்படுவதும் என இரு அம்சங்கள் காணப்படுகின்றன. பிரகடனப்படுத் தப்படுவதற் கும், நடைமுறைப்படுத் தப்படுவதற்கும் இடையில் இடைவெளியை விட்டுவிடா மல் சொன்னதைச் செய்வது சிறந்த அரசாங்கமொன்றின் குறிகாட்டியாகும்.

கடந்த இரண்டு தேர்தல்க ளிலும் சுபீட்சமான நாட்டை யும் அழகிய வாழ்க்கையையும் நாட்டு மக்களுக்குப் பெற்றுத் தருவோம் எனக் கூறிய தரப்பி னரின் வாக்குறுதிகளை நம்பி, சுப நேரத்தில் அநுரவிடம் நாட்டை மக்கள் ஒப்படைத்த னர்.

ஆனால் அரசாங்கம் வாக் குறுதியளித்த எதையும் இது வரை நிறைவேற்றவில்லை-என் றார். (அ)

# வேட்பாளர்களின் கணக்கில் ஏப்ரல் மாத ஊதியம் வைப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 01

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் போட்டியிடும் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் அரச ஊழியர்கள் பலர் ஏப்ரல் மாத ஊதியத்தைச் சட்டவிரோ தமாக பெற்றுக்கொண்டுள்ள தாக இலங்கை ஆசிரியர் சங்கத் தின் தலைவர் பிரியந்த பெர் னாண்டோ குற்றஞ்சாட்டியுள் ளார்.

இவ்வாறு ஆசிரியர்கள், அதி பர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை கல்விசாரா பணியா ளர்கள் மற்றும் கல்வித் திணைக் களத்தில் பணிபுரியும் 400 இற் கும் மேற்பட்டோர் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் வேட்பாளர்களாக கள மிறங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-இந்தத் தேர்தலில் போட் டியிடுவதாயின் பணிக்குழாமி லுள்ள அதிகாரிகள் தமது பணியை இராஜினாமா செய்ய வேண்டும். பணிக்குழாமுக்கு உட்படாத அதிகாரிகள் ஊதி யம் இல்லாத விடுமுறையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியி டும் வேட்பாளர்களில் 90 வீத மானோர் இச்சட்டத்தை மீறி யுள்ளதாகத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இவ்வாறான வேட்பாளர்க ளின் வங்கிக் கணக்குகளில் ஏப் ரல் மாதத்துக்கான ஊதியம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இவ்வாறு வடமத்திய மாகா ணத்தில் போட்டியிடும் 48 வேட் பாளர்களில் அறுவர் மட்டுமே விடுப்புக்கான அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளனர். இது தேர்தலில் தேவையற்ற தாக் கத்தை ஏற்படுத்துவதுடன் சில அதிகாரிகள் கூட்டங்களிலும் கலந்துகொண்டு தங்களின் பணியை மேற்கொண்டு வரு கின்றனர். இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட அதிகாரிகள் பணியி லிருந்து கூட நீக்கப்பட்டனர். அதேபோன்று இது தேர்தல் சட்டம் மற்றும் நிறுவன ஒழுங் குவிதிகளை மீறும் செயற்பா டாகும்-என்றார். (அ)

## நான்கு மாதங்களில் 38 துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, மே. 01

இந்த வருடத்தில் கடந்த 4 மாதங்களில் 38 துப்பாக்கிச் சூடு களில் 27 பேர் கொல்லப் பட் டுள்ளதாக பொலிஸ் வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொலைகளில் பெரும் பாலானவை மேற்கு மற்றும் தெற்கு மாகாணங் களில் நடந் துள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன. போதைப் பொருள் கடத்தல் மற்றும் அவர் களை எதிர்க்கும் பாதாள உல கக் கும்பல் உறுப்பினர்களைக் கொல்வது ஆகியவை இந்த சம்பவங்களுக்கு வழிவகுத்த தாகவும் பொலிஸார் கூறுகின் றனர். (அ)

# தொற்றா நோய்கள் குறித்து மிகவிரைவில் கணக்கெடுப்பு

கொழும்பு, மே. 01

இலங்கையில் தொற்றா நோய்கள் மற்றும் அவற்றினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து, அடையாளம் காண அடுத்த வரு டம் கணக்கெடுப்பொன்று நடத் தப்படவுள்ளதாக, சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் வைத்தி யர் சமிந்தி சமரக்கோன் தெரி வித்தார்.

முன்னதாக 2021ஆம் ஆண்டு தொற்றா நோய்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப் பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது நாட்டில் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவோ ரின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே மீண்டும் குறித்த கணக்கெடுப்பை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக, வைத்தியர் சமிந்தி சமரக்கோன் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்க்கட்சிகளால் வீழ்த்த முடியாது!

## அடித்துக் கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, மே. 01

**இலங்கையில் தற்போதுள்ள எதிர்க்கட்சிகளால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**



எதிர்வரும் டிசெம்பர் மாதம் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி யாவார் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அறிவித்து வருகின்றமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் தற்போது உண்மையான எதிர்க்கட்சி இல்லை. அரசாங்கத்தையும் விமர்சிப்பதற்கு எதுவும் இல்லை. அதனால்தான் இப்படியான நகைச்சுவைத்தனமான கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் தற்போதுள்ள எதிரணிகளால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. புதிதாக எதிர்க்கட்சியொன்று வரவேண்டும். அக்கட்சி தேசிய மக்கள் சக்தியைவிட சிறப்பாக செயற்படவேண்டும். எம்மைவிட மக்களை அதிகம் நேசிக்க வேண்டும்-என்றார். (அ)

# கடும் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய அபாயம்

கொழும்பு, மே. 01

தற்போதைய நாட்களில் கடுமையான மின்னல் தாக்கங்கள் ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன் காரணமாக, மின்னல் ஏற்படும்போது மக்கள் சமவெளிப் பகுதிகளில் நிற்பதைத் தவிர்க்குமாறு அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது, மின்னல்களைத் தோற்றுவிக்கக்கூடிய மேகங்களின் உருவாக்கம் அதிகமாக உள்ளது.

காலை வேளைகளில் அதிக வெப்பம் நிலவுவதால் அதிகளவில் நீர் ஆவியாகி, இத்தகைய மேகங்கள் உருவாகின்றன. இதன் காரணமாக, பிற்பகல் வேளைகளிலேயே அதிகளவில் மின்னல் தாக்கங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் நிலவுகிறது.

மின்னல் ஏற்படும் வேளையில் மின்சாதனங்களை செருகியிலிருந்து நீக்குவதன் மூலம் வீட்டுக்குள் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க முடியும். அதே நேரம், மின்னலின் போது, சமவெளிப் பகுதிகளில் இருப்பதைப் பொதுமக்கள் தவிர்க்க வேண்டும்-என்றார். (அ)

# இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்தது!

கொழும்பு, மே. 01

மார்ச் மாத இறுதிக்குள் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு 6.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் 2025 மார்ச் மாத இறுதியில் உத்தியோகபூர்வ வெளிநாட்டு இருப்பு 7 பில்லியனை கடக்கும் என அவர் கூறினார். (அ)

# இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு 14 தமிழர்கள்

கொழும்பு, மே. 01

இலங்கை நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த 23 அதிகாரிகள் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நிர்வாக சேவை விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நிர்வாக சேவை விசேட தரத்துக்கு தேர்வான 23 அதிகாரிகளில் 14 பேர் தமிழர்கள், ஒருவர் முஸ்லிம், 8 பேர் சிங்களவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025-01-01 முதல் இந்தத் தர உயர்வு அமுலாகும் என கடந்த 25ஆம் திகதி நடந்த ஆணைக்குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு பெறுவோர் பட்டியலில் எஸ்.சிவசிறி, எஸ். முரளிதரன், எஸ்.அச்சுதன், கே. சிறிமோகனன், என்.மணிவண்ணன், என்.சிவலிங்கம், ரி.திரேஸ்குமார். ஏ.சோதிநாதன், சுபாகினி மதியழகன், எஸ்.சத்தியசீலன், பி.தயானந்தன், வை.பரந்தாமன், எம். சிறிஸ்காந்தகுமார் மற்றும் வி.மதுமதி ஆகியோரின் பெயர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

குளோரின் கசிவு காரணமாக

# பசறை வைத்தியசாலை நோயாளிகள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றம்

கொழும்பு, மே. 01

பசறை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்த குளோரின் கொள்கலனில் ஏற்பட்ட கசிவினால் பாதிக்கப்பட்ட அறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்க ளில் இரண்டு சிறுவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

அவர்களுக்கு மூச்சுத் திணறல் மற்றும் தலை சுற்றுதல் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகிலிருந்தவர்களே இவ்வாறு நோய் நிலைமைக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 76 வயதான பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த சம்பவத்தையடுத்து, பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சகல நோயாளர்களையும் லுணுகலை மற்றும் ஹொப்டன் வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# கஞ்சா பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது

கொழும்பு, மே. 01

பதுளை - மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இட்டினாம்பல பகுதியில் கஞ்சா பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் மடுல்சீமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மடுல்சீமை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 7 முதல் 9 அடி உயரங்களை உடைய 19 கஞ்சா செடிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரை பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மடுல்சீமை பொலிஸர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 2023 இல் நாங்கள் வெற்றி பெறவிருந்த தேர்தலை பறித்துக்கொண்டார் ரணில்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, மே. 01

2023 ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, ரணில் விக்கிர மசிங்க பறித்துக் கொண்டார் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொழும்பு மாநகர சபையின் வருடாந்த வருமானம் 30 பில்லியன் ரூபாவாக உள்ளது.

எனினும், மக்கள் தொடர்பில் அக்கறையில்லாத கடந்த ஆட்சியாளர்களால் அந்தப் பணம் முறையாகச் செலவிடப்படவில்லை.



அந்த நகர சபை, திருடர்களின் கூடாரமாகவே இருந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், தேசிய மக்கள் சக்திக்கு வெற்றி பெறும் வாய்ப்பு கிட்டியிருந்தபோது, ரணில் விக்கிரமசிங்க தேர்த லைப் பறித்துக் கொண்டார். எவ்வாறாயினும், இந்த முறை தங்களது வெற்றி வாய்ப்பை எவராலும் தட்டிப் பறிக்க முடியாது-என்றார். (அ)

# வன்முறை கும்பல் கைது!

கொழும்பு, மே. 01

களுத்துறை , பண்டாரகமை, யட்டியன பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து நபரொருவரை வாளால் தாக்கி காயப்படுத் தியதாகக் கூறப்படும் ஆறு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் பண்டாரகமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் தந்தையும் மகனும் உட்பட ஆறு பேர் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு வாள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் ஐவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மே. 01

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெமட்டகொடை பகுதியில் 10 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பெலவத்த பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இதேவேளை, மட்டக்குளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அலிவத்த பகுதியில் 13 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அத்தோடு, வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவின் கொடுவில சந்திக்கு அருகில் 25 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

மேலும், நவகமுவ பொலிஸ் பிரிவின் ஸ்வர்ணபூமி மாவத்தை பகுதியில் 12 கிராம் 130 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொரு ளுடன் சந்தேக நபர் ஒருவரும், கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவில் 11 கிராம் 917 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்களிப்பு மிகஅமைதியாக நடந்தது

கொழும்பு, மே. 01

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

4 நாட்கள் நடைபெற்ற வாக்களிப்பு மிகவும் உகந்த மட்டத்தில் இருப்பதை தமது அமைப்பு அவதானித்ததாக அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

முதல் நாளிலேயே அஞ்சல் வாக்குப் பயன்பாடு 60 வீதத்தைத் தாண்டியதாகக் கூறிய அவர், நான்கு நாள் காலகட்டத்தில் தபால் வாக்குப் பயன்பாடு உயர் மட்டத்தில் இருந்ததாகவும் தெரிவித்தார்.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது பிரச்சாரத் திட்டங்கள் இருந்தபோதிலும், இந்தத் தேர்தலின் போது அவை வாக்குச் சாவடிகளைச் சுற்றி காணப்படவில்லை என ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார்.

# காலிமுகத் திடலில் மேதினக் கூட்டம் ரணில் விக்கிரமசிங்க கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 01

"காலிமுகத் திடலை அரசியல் நிகழ்வுகளுக்கு பயன்படுத்துவதில்லை என அனைத்து கட்சிகளும் தீர்மானித்தன. அந்த உறுதிமொழியை தேசிய மக்கள் சக்தி தற்போது மீறியுள்ளது."-என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-நான் தேர்தலில் போட்டியிடவில்லை.

பொதுக்கூட்டங்களில் உரையாற்றுவதும் கிடையாது. ஓரிரு விளக்கமளிக்கும் கூட்டங்களில்தான் பங்கேற்றுவருகின்றேன். அப்படி இருந்தும் ஊர் முழுதும் என்னைதான் ஆளுங்கட்சியினர் திட்டித் தீர்த்து வருகின்றனர். எதிர்க்கட்சித் தலைவரை பாராட்டுகின்றனர். இப்படியொரு தேர்தலை நான் கண்டதில்லை.

அதேபோல மே முதலாம் திகதியை நினைவு கூர வேண்டும். அரசியல் நிகழ்வுகளுக்கு காலிமுகத்திடலை வழங்குவதில்லை என முடிவெடுத்தோம். அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்கின. தற்போது மே தினத்தை கோல் பேஸில் நடத்தி அந்த உறுதிமொழியை தேசிய மக்கள் சக்தி மீறியுள்ளது."-என்றார். (அ)

# ஜனநாயக விழுமியங்களை ஜனாதிபதி பேணவேண்டும்

## டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் வலியுறுத்து

கொழும்பு, மே. 01

**தேர்தல் விதிமுறைகள் மீறல்கள் குறைந்துள்ளதை வரவேற்றுள்ள டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஜனநாயக விழுமியங்களை ஜனாதிபதி பேணவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கைகள் மற்றும் ஊடக வெளியீடுகளின் படிஇ தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் தேர்தல் சட்ட மீறல்களில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டுள்ளதை ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் அவதானிக்கிறது.

இதுதேர்தல்களை நடத்துவதில் ஒரு சாதகமான முன்னேற்றத்தைக் குறிப்பதோடு இலங்கையில் ஜனநாயக செயல்முறைகளை வலுப்படுத்துவதில் அரசியல் பங்குதாரர்கள் தேர்தல் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் கூட்டு முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

பொதுவான முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் விதிமீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் அவை பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன. பொருட்களை விநியோகிப்பதன் மூலம் வாக்குகளை விலைக்கு வாங்குதல் தாக்குதல்கள் மற்றும் சொத்து சேதம் உள்ளிட்ட வன்முறைகள் மற்றும் தேர்தல் நோக்கங்களுக்காக பொது சொத்துக்களைப் பயன்படுத்துதல் ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த தேசிய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இத்தகைய மீறல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாலும் அவை தொடரும் நிலை ஜனநாயகத்தின் நேர்மையைத் தளர்த்துவதோடு தேர்தல் செயல்முறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் சிதைக்கிறது.

ஆளும் கட்சி பிரதிநிதிகளை அதிக எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கும் உள்ளூராட்சிப் பிரிவுகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி வெளியிடும் சர்ச்சைக்குரிய பொது அறிக்கைகள் கவலையை அதிகரிக்கின்றன.

இத்தகைய கருத்துக்கள் வாக்காளர் சுதந்திரத்தின் மீது முறையற்ற செல்வாக்கு செலுத்தப்படுவதற்கான தீவிர கவலைகளை எழுப்புகின்றன. மேலும் செயல்படும் ஜனநாயகத்திற்கு அவசியமான சமத்துவம் பாரபட்சமின்மை பொறுப்பான தலைமைத்துவம் ஆகிய கொள்கைகள் கவலைக்குரிய வகையில் புறக்கணிக்கப்படுவதையும் இது வெளிப்படுத்துகிறது.

இந்த அணுகுமுறை தகுதியை விட கட்சி விசுவாசத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசியல் கலாசாரத்தை நிலை நிறுத்தும் அபாயத்தைக் கொண் டுள்ளது. மேலும் தேர்தல் காலங்களில் பொது வளங்கள் பேரம் பேசும் பொருட்களாகக் கருதப்படும் நிலைக்கும் இது வழிவகுக்கிறது. குறிப்பாக மிக உயர்ந்த நேர்மை தேவைப்படும் தேர்தல் காலங்களில் உயர் மட்டத் தலைமைத்துவம் நல்லாட்சிக்கான தரத்தை உறுதி செய்ய வேண்டும்-என்று கூறியுள்ளது. (அ)

# இந்திய அரசின் ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்!

## ஜூன் 8 முடிவுத் திகதி

கொழும்பு, மே. 01

இந்திய அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இலங்கையர்கள் இடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமானி, முதுமாணி மற்றும் கலாநிதி கற்கை நெறிகளைத் தொடர முடியும்.

ஒவ்வொரு கற்கை நெறிகளுக்குமான தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான விபரங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமாணிக் கற்கை நெறி ஒன்றுக்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்து கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களாகவும், யோக சாஸ்திரத்தில் கலைமாணி மற்றும் யோகாவில் விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு பாடத்துறையில் தகமை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் முதுமாணிக் கற்கைநெறி ஒன்றுக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய மத்திய மருத்துவப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய - அவ்வத் துறைகளில் இளமாணிப் பட்டத்தைக் கொண்டவர்களாகவும், கலாநிதிப் பட்டத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய மத்திய மருத்துவப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய - அவ்வத் துறைகளில் இளமாணி, முதுமாணித் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் காலம் முழுவதற்குமான கற்கைநெறிக் கட்டணம் மற்றும் மாதாந்த மாணவர் உதவித் தொகை, தங்குமிடத்துக்கான உதவுதொகை மற்றும் வருடாந்த மானியம் என்பன வழங்கப்படும் என்றும், ஆர்வமுடையவர்கள் www.a2ascholarships.iccr.gov.in என்ற இணையத்தளத்தின் ஊடாக எதிர்வரும் ஜூன் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதல் செயலாளர் சந்தீப் சௌதாரி அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களை *011-2421605, 011-2422788, 011-2422789* என்ற தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது eduwing.colombo@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக இந்தியத் தூதரகத்தின் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ)

# தேர்தலுக்கு விடுமுறை கொடுங்கள்!

கொழும்பு, மே. 01

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்

வாக்களிக்கும் வகையில், தனியார் துறை ஊழியர்களுக்குத் தேவையான விடுப்பு வழங்குமாறு தேர்தல் ஆணையகம் முதலாளிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் பிரிவு 84 ஏ (1) இன் படி, இந்த விடுப்பு ஊழியர்களுக்கு சம்பளக் குறைப்பு அல்லது தனிப்பட்ட விடுப்பு இல்லாமல் வழங்கப்படவேண்டும்.

பணியிடத்திலிருந்து வாக்குச் சாவடிக்கு உள்ள தூரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் விடுப்பின் நீளம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

40 கிலோமீற்றர் அல்லது அதற்கும் குறைவான தூரம் இருந்தால் அரை நாளாகவும்,

40 முதல் 100 கிலோ மீற்றர் வரை இருந்தால் ஒரு நாளாகவும்,

100 முதல் 150 கிலோ மீற்றர் வரை இருந்தால் ஒன்றரை நாளாகவும்,

150 கிலோ மீற்றருக்கு மேல் இருந்தால் இரண்டு நாட்களாகவும் விடுமுறை காலத்தை சரிசெய்ய வேண்டும் எனவும் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ)

# கொழும்பில் இன்று 15 மே தின பேரணி!

கொழும்பு, மே. 01

கொழும்பில் இன்று குறைந்தது 15 மே தின பேரணிகள் மற்றும் நினைவு நிகழ்வுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதன்படி, சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் வகையில் நடைபெறும் மே தின பேரணிகளுக்கு பொலிஸார் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள், போக்குவரத்துத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளனர்.

நாடு முழுவதும் நடைபெறும் மே தின பேரணிகள், கூட்டங்கள் மற்றும் நினைவு நிகழ்வுகளுக்கு பொருத்தமான பாதுகாப்பு, போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, மாகாணங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்கள் ஆகியோருக்கு பொலிஸ் தலைமையகம் ஏற்கனவே தேவையான அறிவுறுத்தல்கள், உத்தரவுகளை வழங்கியுள்ளது.

கொழும்பு, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மே தின பேரணிகள் மற்றும் நினைவு நிகழ்வுகள் நடைபெறுவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடும்.எனவே வாகன சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 33 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, மே. 01

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக மொத்தம் 33 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.மார்ச் 3 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை வரை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் 349 கட்சி ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.நேற்று முன் தினம் வரை தேர்தல் தொடர்பான 3 குற்றவியல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மேலும், மேற்கண்ட காலகட்டத்தில் 89 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.அதேநேரம், தேர்தல் சட்டங்களை மீறியதற்காக பயன்படுத்தப்பட்ட 32 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுத்தர சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தராகி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வில் கோரிக்கை



மட்டக்களப்பு, மே 01

**இந்த நாட்டில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் எந்த அரசாங்கம் வந்தாலும் நீதியைப்பெற்றுத்தரப்போவதில்லையென்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றின் கீழ் நீதியைப்பெற்றுத்தர சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் 29ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்தின.

சிரேஷ்ட ஊடகவியலாளர் தராகி சிவராமனின் உருவப்படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பா.அரியநேந்திரன், சுதந்திர ஊடக இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஸ்மன், சிவில் சமூக செயல்பாட்டாளர் எஸ். சிவயோகநாதன், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)




# தென்கிழக்கு பல்கலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

ஒலுவில், மே 01

புவியியல் தரவுகள் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பான அடிப்படை கருத்துகள், கருவிகள் மற்றும் பயன்பாடுகளை அறிமுகப்படுத்தும் குறுகிய கால கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புவியியல்துறையின் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் தலைமையில் நடைபெற்றது.

பிராந்தியத்தின் கல்வி மேம்பாட்டில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல்வேறு குறுங்கால கற்கை நெறிகளையும் முன்னெடுத்துவரும் சந்தர்ப்பத்தில், பல்கலைக்கழகத்தின் முக்கிய பீடங்களில் ஒன்றான கலை கலாசார பீடமும் பல்வேறு குறுங்கால கற்கைநெறிகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் அடிப்படையில் புவியியல்துறை ஆரம்பித்துள்ள கற்கைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ-01)



# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை!

## 18 வயது இளைஞன் கைது

சம்பூர், மே 01

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள நல்லூர் களப்புக் கடல் பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையத்தை சம்பூர் பொலிஸார் முற்றுகையிட்டு பெருந்தொகை கசிப்பை மீட்டதாகவும் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரசிறியின் ஆலோசனைக்கமைவாக சம்பூர் பொலிஸார் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது, நான்கு பரல்களிலிருந்து கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் கோடா 757 போத்தல்களும், 31 போத்தல் கசிப்பும் மற்றும் வயர் உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அத்தோடு சம்பூர் - நல்லூர் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரை மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கருப்பை கழுத்து புற்றுநோய் பற்றி விழிப்புணர்வூட்டும் செயல்பாடுகள்

சாய்ந்தமருது, மே 01

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கருப்பைக் கழுத்து புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைவாக இடம்பெற்ற இக்கருப்பைக் கழுத்து புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் இதில் கலந்து கொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் உடல் நிறை குறியீட்டெண், இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்பட்டது. (எ-06)

# கல்முனையில் மேதின கூட்டம்

கல்முனை, மே 01

அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் 33ஆவது ஆண்டு மே தினக் கூட்டம் இன்று அம்பாறை மாவட்டம் கல்முனை தமிழர் கலாசார மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஊழியர்களின் நலன் மற்றும் தொழிலாளர் நலன் தொடர்பான விசேட உரைகள் இடம்பெறவுள்ளதுடன் சங்கத்தின் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

# மாணவர் பாராளுமன்ற தேர்தல்



சாய்ந்தமருது, மே 01

மாணவர்களிடையே ஜனநாயக மரபுகளை மதித்தல் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட சமூக விஞ்ஞான பாடத்தின் இணைப்பாடவிதான செயல்பாடான மாணவர் பாராளுமன்றத்தை உருவாக்கும் பொருட்டு மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான மாணவர் பாராளுமன்றத் தேர்தல் அம்பாறை மாவட்டம், கல்முனை கல்வி வலயம் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.சி.நஸ்லின் றிப்கா ஆலோசனை, வழிகாட்டலில் மாணவர் பாராளுமன்றத்துக்கு பொறுப்பான ஆசிரியர் அமீர் ஹூஸைன் தலைமையில் மிக நேர்த்தியாக மாணவர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தல் நடவடிக்கையை வலயத்தின் வலய பாராளுமன்ற இணைப்பாளர், ஆசிரிய ஆலோசகர் ஐ.எம். மௌசூர், சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர்களான முஹம்மட் தையூப், ஜஹூலூல் மற்றும் ஆங்கில பாடத்துக்கான வலய இணைப்பாளர் எம்.ஆரிப்பும் கண்காணிப்பு செய்தனர். (எ-06)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 17ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா

ஒலுவில், மே 01

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெறவுள்ளதாக பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் யூ.எல். அப்துல் மஜீதின் தலைமையில் வேந்தர் பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் 2077 மாணவர்கள் பட்டங்களை பெறவுள்ளனர்.

இதேவேளை ஒவ்வொரு அமர்விலும், முன்னணி அறிவியல்சார் நிபுணர் ஒருவர் சிறப்புரை ஆற்றவுள்ளார். இதில் முதலாம் நாள் முதல் அமர்வில் உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொட்டகொடவும் இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை பேராசிரியர் சீதா பி பண்டாரவும் மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் உரையாற்றவுள்ளனர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைத் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் கே.எல் வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ராஜரட்ட [illegible] மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி, சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பியும் உரையாற்றவுள்ளனர்.

பிரயோக விஞ்ஞான பீடத்திலிருந்து 172 மாணவர்களும் பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும் தொழில் நுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும் கலை கலாசார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் 687 என மொத்தம் 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெறவுள்ளனர். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி தாக்குதலில் சிக்கி நைஜீரியாவில் 26 பேர் உயிரிழப்பு

அபுஜா, மே 01

**நைஜீரியாவில் கண்ணிவெடி தாக்குதலில் சிக்கிய பயணிகள் பேருந்து வெடித்து சிதறியதில் 26 பேர் உயிரிழந்தனர். இதனால், அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.**

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டில் ஐ. எஸ்., அல் கொய்தா, போகோஹராம் போன்ற பயங் கரவாத அமைப்புகளும், பல் வேறு கிளர்ச்சி யாளர்கள் குழுக்களும் செயல் பட்டு வருகின்றன.

கொலை, கொள்ளை, பணத் துக்காக பொதுமக்கள், பாட சாலை மாணவர்களை கடத்தும் செயலில் ஈடுபடும் "பண்டிட்ஸ்" என்ற கடத்தல் கும்பலும் செயல் பட்டு வருகின்றது. இந்த பண்டிட்ஸ் கடத்தல் கும்பலை நைஜீரிய அரசாங்கம் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்தக் குழுக்கள் பொதுமக்கள், பாதுகாப்புப் படையினரை குறி வைத்து அவ்வப்போது தாக்கு தல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், அந்த நாட் டின் போர்னோ மாகாணத்தில் உள்ள நெடுஞ்சாலையில் நேற் றுக்காலை பேருந்து ஒன்று சென் றுகொண்டிருந்தது. அதில் 29 பேர் பயணித்தனர். ரனா என்ற பகுதியில் சென்றபோது வீதி யோரம் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் பேருந்து சிக் கியது. இதனால், பேருந்து வெடித்து சிதறியது.

இந்தச் சம்பவத்தில் 26 பேர் உடல் சிதறி பலியாகினர். எஞ் சிய 3 பேர் படுகாயமடைந்த னர். அவர்கள் மீட்கப்பட்டு அரு கில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட் டுள்ளனர். நாட்டின் எல்லை யோர மாகாணத்தில் இடம் பெற்ற இந்தத் தாக்குதலை போகோ ஹராம் பயங்கரவாதி கள் நடத்தியிருக்கலாம் என்று பாதுகாப்புத்துறையினர் தெரி வித்துள்ளனர். (எ)

# ஈரானில் வெடிவிபத்து இதுவரை 70 பேர் பலி!

தெஹ்ரான், மே 01

ஈரான் துறைமுகத்தில் ஏற் பட்ட வெடி விபத்தால் இதுவரை 70 பேர் உயிரிழந்தனர். இதே வேளை, 1,000இற்கும் மேற்பட் டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈரானின் பந்தர் அப்பாஸ் நகரில் மிகப்பெரிய வர்த்தக துறைமுகம் உள்ளது. இந்தத் துறைமுகத்தில் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. துறை முகத்தில் கண்டெய்னர்கள் நிறுத்தி வைத்திருந்த பகுதியில் இவ்வாறு வெடி விபத்து ஏற் பட்டது.

ஏவுகணைகளுக்கு பயன்படுத் தப்படும் எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கண்டெய் னர்களை சரிவர கையாளாததால் இந்த வெடி விபத்து ஏற்பட்டுள் ளது என தகவல் வெளியாகியுள் ளது. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அமோனியம் பெர்குளோரேட் என்ற வேதிப் பொருள் அந்தத் துறைமுகத்தில் உள்ள கண்டெய்னர்களில் சேமித்து வைக்கப்படிருந்தது. ஏவுகணைகளுக்கான எரிபொரு ளாக பயன்படும் இந்த வேதிப் பொருள் வெடித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இதனை இராணுவ அமைச்சு மறுத்துள்ளது.

இந்த நிலையில், இந்த வெடி விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 70 ஆக அதிகரித் தது. மேலும், இந்தச் சம்பவத் தில் 1,000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இந்த வெடி விபத்துக்கான காரணம் குறித்து ஈரான் அதிகாரிகள் இது வரை எதுவும் கூறவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. (எ)

# இரு தரப்பினர் இடையே சிரியாவில் கடும் மோதல்

## 26 பேர் பலி, 50 பேர் படுகாயம்



டமாஸ்கஸ், மே 01

சிரியாவில் இரு தரப்பினர் இடையே இடம்பெற்ற கடும் மோதலில் 26 பேர் பலியாகி னர். 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சிரியாவில் அல் ஆஷாத் தலைமையிலான அரசு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கவிழ்ந் தது. ஜனாதிபதியாக இருந்த அல் ஆஷாத் ரஷ்யாவுக்கு தப் பிச்சென்றார். இதையடுத்து, சிரி யாவில் ஆட்சியைக் கைப்பற் றிய ஹயத் தஹ்ரிர் அல் ஷியாம் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி அல் ஆஷாத்தின் ஆதரவாளர்கள் குழுக்களாக சேர்ந்து சிரியா அரசுக்கு எதி ராக கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சிரியா அரசப்படைகள் மீதும் இந்தக் கிளர்ச்சிக்குழுக்கள் தாக் குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸின் ஜரமணா பகுதியில் சன்னி பிரிவினருக்கும், டுரூஸ் மதத்தை சேர்ந்தவர்களுக் கும் இடையே நேற்று முன்தி னம் கடும் மோதல் வெடித்தது. இந்த மோதலில் துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 26 பேர் உயி ரிழந்தனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் டுரூஸ் மதத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு தரப்பு இடையேயான மோத லால் அப்பகுதியில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. (எ)

# துருக்கியின் போர் விமானம் பாகிஸ்தான் செல்லவில்லை

அங்காரா, மே 01

பாகிஸ்தானுக்கு போர் விமா னங்களை அனுப்பவில்லை என்று துருக்கி விளக்கமளித்துள்ளது.

இந்தியாவின் காஷ்மீர் மாநி லம் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலைய டுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித் துள்ளது. இந்திய எல்லையை ஒட்டிய பகுதிகளில் உள்ள இரா ணுவத் தளங்களில் பாகிஸ்தான் படைகளை குவித்து வருவதாக சொல்லப்படுகிறது. இத்தகைய பரபரப்பான சூழலில், துருக்கி யும் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியை வழங்கியதாக தகவல் வெளியானது.

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள விமானப்படை தளத்துக்கு கடந்த 28 ஆம் திகதி துருக்கி விமானப்படைக்குச் சொந்த மான "சி -130 ஹெர்குலிஸ்" போர் விமானம் சென்றது அதில், ஏராளமான போர் கருவிகள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. விமா னம் வந்ததை இரு நாடுகளும் உறுதி செய்தபோதிலும், அவற் றில் எடுத்துச் செல்லப்பட்ட இரா ணுவத் தளபாடங்கள் பற்றிய விவரங்கள் வெளியாக வில்லை.

இந்த நிலையில், போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு அனுப்பவில்லை என்று துருக்கி தெரிவித்துள்ளது. சரக்கு விமா னம் மட்டுமே பாகிஸ்தானுக்கு சென்றதாக துருக்கி அரசு விளக் கமளித்துள்ளது. (எ)

# கனடாவின் பிரதமருக்கு இந்திய பிரதமர் வாழ்த்து

ஒட்டாவா, மே 01

கனடா பிரதமராக மார்க் கார்னி மீண்டும் தெரிவு செய் யப்பட்டுள்ளார். அவருக்கு இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கனடாவில் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தநிலை யில் 43.4 சதவீதம் வாக்குகள் பெற்ற லிபரல் கட்சியின் தலை வர் மார்க் கார்னி மீண்டும் பிரத மராக தெரிவு செய்யப்பட்டுள் ளார். இதன்மூலம் தொடர்ந்து 4ஆவது முறையாக லிபரல் கட்சி ஆட்சி அமைக்கவுள்ளது.

இந்த நிலையில் கனடாவின் புதிய பிரதமராக தெரிவு செய் யப்பட்டுள்ள மார்க் கார்னிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரி வித்துள்ளார். இதுதொடர்பில் அவர் தனது எக்ஸ் வலைத்தளத் தில், "கனடாவின் பிரதமராக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டதற் கும், லிபரல் கட்சி வெற்றி பெற் றதற்கும் மார்க் ஜே கார்னிக்கு வாழ்த்துக்கள். இந்தியாவும், கனடாவும் பகிரப்பட்ட ஜனநா யக விழுமியங்கள், சட்டத்தின் ஆட்சிக்கு உறுதியான அர்ப்ப ணிப்பு மற்றும் துடிப்பான மக் களுக்கு இடையேயான உறவுக ளால் பிணைக்கப்பட்டுள்ளன. எங்கள் கூட்டாண்மையை வலுப்படுத்தவும், எங்கள் மக்க ளுக்கு அதிக வாய்ப்புகளை அளிக் கவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர் நோக்குகிறேன்"- என்று பதிவிட் டுள்ளார். (எ)

# சிறுமியை வன்புணர்ந்த அமைச்சர் பதவி நீக்கம்!

## நைஜீரியாவில் சம்பவம்

விண்ட்ஹோக், மே 01

நைஜீரியாவில் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் ஆல்பர்ட் ஹெங்காரி பதவி நீக்கம் செய் யப்பட்டுள்ளார்.

ஆபிரிக்க நாடான நைஜீரி யாவில் ஜனாதிபதி நெடும்போ நந்தி நதைத்வா தலைமையிலான ஸ்வாபோ கட்சி ஆட்சி நடை பெற்று வருகிறது. இவரது அமைச்சரவையில் வேளாண் துறை அமைச்சராக இருந்தவர் மெக் ஆல்பர்ட் ஹெங்காரி (வயது -59). இவர் கடந்த 2020ஆம் ஆண்டு 16 வயதுச் சிறுமியை வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை விண்ட்ஹோக்கில் உள்ள குற்றவியல் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. இதற்கி டையே சாட்சியத்தை மறைக்க பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அவர் இலஞ்சம் கொடுக்க முயன்றார்.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் நேற்று முன்தினம் அமைச்சரை கைது செய்து நீதி மன்றில் முற்படுத்தினர். அப் போது, அவருக்கு பிணை மறுக் கப்பட்டது. இந்த நிலையில் அமைச்சர் ஆல்பர்ட் ஹெங்கா ரியை பதவி நீக்கம் செய்து ஜனா திபதி நெடும்போ அதிரடியாக உத்தரவிட்டுள்ளார். (எ)

# சீன ஹோட்டலில் பயங்கர தீ விபத்து

## 22 பேர் உடல் கருகிப் பலி

பீஜிங், மே 01

சீனாவில் ஹோட்டலில் ஏற் பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 22 பேர் உடல் கருகிப் பலியாகி னர்.

சீனாவின் லியோயிங் மாகா ணம் லியாயங் நகரில் பிரபல மான ஹோட்டல் உள்ளது. இந்த ஹோட்டலில் நேற்று முன்தினம் மதியம் 12. 30 மணி யளவில் 30இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் உணவு எடுத்துக்கொண்டிருந்தனர்.

அப்போது, எதிர்பாராத விதமாக ஹோட்டலில் தீ பற் றியது. இந்தச் சம்பவத்தில் ஹோட்டலில் இருந்த 22 பேர் தீயில் சிக்கி உடல் கருகி உயிரி ழந்தனர். மேலும், 3 பேர் படுகா யமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு மீட்புக்குழுவினர், படுகாயம டைந்தவர்களை மீட்டு சிகிச் சைக்காக அருகில் உள்ள மருத் துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்ற னர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி வெற்றி

## போராடி தோற்றது டில்லி அணி

புதுடில்லி, மே 01

டில்லி அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


ஐ.பி.எல். தொடரில் புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில் கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

குர்பாஸ் 26 ஓட்டங்களிலும், சுனில் நரைன் 27 ஓட்டங்களிலும், ரஹானே 26 ஓட்டங்களிலும், வெங்கடேஷ் ஐயர் 7 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து ரகுவன்ஷி மற்றும் ரிங்கு சிங் ஜோடி சேர்ந்தனர். இதில் ரகுவன்ஷி 44 ஓட்டங்களிலும், ரிங்கு சிங் 36 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

தொடர்ந்து ரஸல் மற்றும் பவல் ஜோடி சேர்ந்தனர். இறுதியில் கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 204 ஓட்டங்கள் எடுத்தது. கொல்கத்தா தரப்பில் அதிகபட்சமாக ரகுவன்ஷி 44 ஓட்டங்கள் எடுத்தார். டில்லி தரப்பில் ஸ்டார்க் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 205 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் டில்லி விளையாடியது.

டில்லி அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய அபிஷேக் 4 ஓட்டங்களில் வெளியேறினார். டு பிளஸ்சிஸ் 2 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தின் போக்கை தன்வசப்படுத்தினார். எனினும், ரிங்கு சிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

கருண் நாயர் (15), கே.எல். ராகுல் (7), ஸ்டப்ஸ் (1), அஷூதோஷ் சர்மா (7), ஸ்டார்க் (0) என அடுத்தடுத்து ஆட்டமிழந்தபோதும் அக்சர் பட்டேல் 43 ஓட்டங்கள்



எடுத்தமை அணிக்கு ஆறுதல் கொடுத்தது.

இறுதியில் நிகாம் 38 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். சமீரா 2 ஓட்டங்களுடனும், குல்தீப் யாதவ் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 9 விக்கெட்களை இழந்து டில்லி அணி 190 ஓட்டங்களை எடுத்தது. சுனில் நரைன் 3 விக்கெட்களும், வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்களும் வீழ்த்தினர். இதனால், கொல்கத்தா அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லியை வீழ்த்தி வெற்றி பெற்றது. (எ)



# வைபவ் சூர்யவன்ஷியின் அச்சமற்ற அணுகுமுறை

## 35 பந்துகளில் சதம் - சச்சின் பாராட்டு

ஜெய்ப்பூர், மே 01

வைபவ் சூர்யவன்ஷியின் அச்சமற்ற அணுகுமுறை அற்புதமான இன்னிங்ஸூக்கு வித்திட்டது என்று சச்சின் பாராட்டியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற 47ஆவது லீக் ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இதில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது. வைபவ் சூர்யவன்ஷி சதம் விளாசினார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய 14 வயது வீரரான சூர்யவன்ஷி வெறும் 35 பந்துகளில் சதம் அடித்தார். இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் குறைந்த வயதில் சதமடித்த வீரர், அதிவேகமாக சதமடித்த இந்தியர் போன்ற ஏராளமான சாதனைகளை படைத்தார். இதனால் சூர்யவன்ஷி பல முன்னாள் ஜாம்பவான் வீரர்களின் பாராட்டு மழையில் நனைந்து வருகிறார்.

அந்த வரிசையில் இந்திய ஜாம்பவான் வீரரான சச்சின் டெண்டுல்கர், வைபவ் சூர்யவன்ஷியை வெகுவாக பாராட்டியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "வைபவின் அச்சமற்ற அணுகுமுறை, துடுப்பாட்ட வேகம், பந்தின் லெந்தை விரைவில் அடையாளம் காணும் திறன் மற்றும் பந்துக்கு ஏற்றவாறு சக்தியை மாற்றும் திறமை ஆகியவை அந்த அற்புதமான இன்னிங்ஸூக்கு பின்னணியில் உள்ளன.

இறுதி முடிவு: 38 பந்துகளில் 101 ஓட்டங்கள். நன்றாக விளையாடினார்!!"- என்று பதிவிட்டுள்ளார்.

# வைபவ் சூர்யவன்ஷிக்கு 35 இலட்சம் ரூபாய் பரிசு

பாட்னா, மே 01

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இதில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றிபெற்றது.

ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரராக களமிறங்கிய 14 வயதேயான வைபவ் சூர்யவன்ஷி மிரட்டலான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் விளாசினார். வெறும் 35 பந்துகளில் சதம் அடித்து ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பல சாதனைகளை சூர்யவன்ஷி படைத்துள்ளார். அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், வைபவ் சூர்யவன்ஷிக்கு இந்தியாவின் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார், 35 இலட்சம் ரூபாய் (இலங்கை மதிப்பில்) பரிசுத்தொகை அறிவித்துள்ளார். (எ)

# ஷத்மான் இஸ்லாம் சதம் பங்களாதேஷ் முன்னிலை

சட்டோகிராம், மே 01

சிம்பாவேவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் வீரர் ஷத்மான் இஸ்லாம் சதமடித்துள்ளார்.

சிம்பாவே கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் சிம்பாவே வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பங்களாதேஷின் சட்டோகிராமில் நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக சீன் வில்லியம்ஸ் 67 ஓட்டங்கள் எடுத்தார்.

பங்களாதேஷ் தரப்பில் தைஜூல் இஸ்லாம் 6 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 87 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 291 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் அந்த அணி 64 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

பங்களாதேஷ் தரப்பில் ஷத்மான் இஸ்லாம் சதம் (120 ஓட்டங்கள்) அடித்து அசத்தினார். மெஹதி ஹசன் மிராஸ் 16 ஓட்டங்களுனுடனும், தைஜூல் இஸ்லாம் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். சிம்பாவே தரப்பில் வின்சென்ட் மசேகேசா 3 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். (எ)

முத்தரப்பு கிரிக்கெட் தொடர்

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி இந்திய மகளிர் அணி வெற்றி

கொழும்பு, மே 01

இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய மகளிர் அணிகள் பங்கேற்றுள்ள ஒரு நாள் கிரிக்கெட் தொடர் கொழும்பில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதின.


இதில், இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 276 ஓட்டங்களை எடுத்தது. ஹர்மன்ப்ரீத் கவுர் 41 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

தென்னாபிரிக்கா தரப்பில் நோன்குலுலேகோ மிலாபா 2 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 277 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் கண்டது.


முதல் விக்கெட்டுக்கு 140 ஓட்டங்கள் எடுத்து தென்னாபிரிக்கா அசத்தியது. இருப்பினும், லாரா வால்வார்ட் 43 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய லாரா குடால் 9, கரபோ மெசோ 7, சுனே லூஸ் 28, க்ளோ ட்ரையன் 18, அன்னெரி டெர்க்சன் 30 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து வெளியேறினர். மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய டாஸ்மின் பிரிட்ஸ் சதம் அடித்த நிலையில் 109 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து களமிறங்கிய நாடின் டி கிளார்க் ஓட்டமின்றியும், மசாபட்டா கிளாஸ் 2, நோன்குலுலேகோ மிலாபா 8 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர். இறுதியில் தென்னாபிரிக்கா 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

அந்த அணி தரப்பில் ஸ்னே ராணா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய அணி இதுவரை தான் விளையாடிய 2 லீக் ஆட்டங்களிலும் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் இலங்கையை மே 4ஆம் திகதி எதிர்கொள்கிறது. (எ)



# மட்ரிட் ஓபின் ரென்னிஸ் காலிறுதியில் ஸ்வியாடெக்



மட்ரிட், மே 01

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாடெக் காலிறுதிக்கு முன்னேறினார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் போலந்தின் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக், ரஷ்யாவின் டயானா ஷ்னைடர் உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செட்டை 6-0 என்ற கணக்கில் இகா ஸ்வியாடெக்கும், 2ஆவது செட்டை 7-6 (7-3) என்ற கணக்கில் டயானா ஷ்னைடரும் கைப்பற்றினர். தொடர்ந்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செட்டில் அனல் பறந்தது.

இதில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட ஸ்வியாடெக் 6-4 என்ற புள்ளிக்கணக்கில் டயானா ஷ்னைடரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கான...

வரையறைகளுக்குள் குறிப்பிட்ட கொள்கை பதில்களை உருவாக்குவதில் இலங் கைக்கு ஆதரவளிப்போம்" - என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பில் அதிகாரிகளுடனான பேச்சுகள் மற்றும் வாஷிங்டன் விதிக்கும் அதிகரித்த வரிகளை மீண்டும் அமுல்படுத்தினால் நாட்டின் மீட்சி பாதிக்கப்படும் என்ற எச்சரிக்கைக்கு சுமார் மூன்று வாரங்களுக்குப் பின்னர் சர்வதேச நாணய நிதியம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

உணவு, எரிபொருள், மருந்துகள் போன்ற மிக அத்தியாவசிய இறக்கு மதிகளுக்குக்கூட நிதியளிக்க அந்நிய செலாவணி தீர்ந்துபோன பின்னர், கடந்த 2022ஆம் ஆண்டில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 290 கோடி டொலர் பிணை எடுப்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து, இலங் கையின் பொருளாதாரம் 2024 காலாண் டில் 5.4 சதவீத வளர்ச்சியையும் உள் நாட்டு உற்பத்தி 5.0 சதவீத வளர்ச்சியை யும் அடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் பிணை எடுப்புத் திட்டத்தின் அடுத்த மீளாய்வு எதிர்வரும் ஜூன் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என்றும் இவான் பாபஜெர்ஜியோ கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கு...

**யாழ்ப்பாணத்தில்...!**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மே தின எழுச்சிக் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான தமிழ்த் தேசிய பேரவையின் மே தினக் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் இளங் கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாக்சிச லெனினிச கட்சியின் மே தின ஊர்வலம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் - ஐந்து சந்தியில் ஆரம்பமாகும். ஊர்வல நிறைவைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் றிம்மர் மண்டபத்தில் மே தினக்கூட்டம் நடைபெறும்.

**ஏனைய இடங்களில்...!**

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் மாலை 3.30 மணிக்க கொழும்பு - காலிமுகத்திடலில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெறும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக்கூட்டம் நுவரெலியாவின் தலவாக்கலை நகரில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பங்காளி கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்பர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினம் கூட்டம் கொட்டகலை, அக்கரபத்தனை மற்றும் பொகவந்தலாவ ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தின கூட்டம் நாமல் ராஜபக்ஷ தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு - நுகேகொடை ஆனந்த சமரக்கோன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினம் அந்தக் கட்சியின் தலைமை பணிமனையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பிரதான மே தினக் கூட்டத்தை இம்முறை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அக்ஷய...

கிட்டும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலுள்ளது. தங்கத்தை வாங்க முடியாதவர்கள் உப்பு அல்லது மஞ்சளை வாங்கலாம் என்பதும் நம்பிக்கை.

இந்த நிலையில், அக்ஷய திருதியை தினமான நேற்று வடமராட்சியின் பல பகுதிகளில் ஒரு கிலோ உப்பு 500 ரூபாய் வரை விற்பனையானதாக அறிய வருகிறது. சந்தையில், ஒரு கிலோ உப்பு 300 ரூபாய் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## மருத்துவர்கள்...

தெல்லிப்பழை ஆதார மருத்துவ மனை அத்தியட்சகரின் நிர்வாக செயல் திறன் இன்மை, நிர்வாகத்தில் காணப்படும் குறை பாடுகள் மற்றும் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி அவசர சிகிச்சை பிரிவில் தனிநபர் ஒருவர் ஊழியர்களின் கடமைக்கும் ஏனைய நோயாளிகள் சிகிச்சை பெறவும் இடையூறு விளை வித்த சம்பவம் தொடர்பில் நிர்வாகம் நடவடிக்கைகள் எடுக்காமை என்பவற்றை கண்டித்தும் மருத்துவ அத்தியட்சகருக்கு எதிராக நடுநிலையான - பக்கச் சார்பற்றி விசார ணையை வலியுறுத்தி யுமே இந்த அடையாள பணிப்புறக் கணிப்பு போராட்டத்தை அரச மருத்துவ அதி காரிகள் சங்கம் மேற்கொள்ள வுள்ளது. இதற்கு ஏனைய மருத்துவ மனை தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவிக்கவுள்ளன - என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, "மக்களை பாதிக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இந்த தொழிற்சங்க போராட்டத்தை பாராளுமன்ற உறுப்பினராக நான் அனுமதிக்கப் போவதில்லை", என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் இ. அர்ச்சுனா தனது சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்...

கொள்கையாக உள்ளது என்று வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சிவில் அமைப்புகளின் தலைவர்களுக்கும் அரசாங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் கொள்கை தேசிய ஒருமைப்பாடே. இனங்களுக்கிடையில் பேதங்களை ஏற்படுத்தவோ அல்லது எந்தவொரு தரப்பினரையும் இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடவோ அரசாங்கம் இடமளிக்காது. தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் இனம், மதம் அல்லது வேறு பாடுகளைப் பாராது சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து அரசாங்கம் உணர்வுபூர்வமாக இருக்கிறது. எந்த வொரு சமூகம் தொடர்பிலும் தீர்மானங்களை எடுக்கும்போது சம்பந்தப்பட்ட சமூகத்தின் கோரிக்கைகள் மற்றும் குரலுக்கு செவிசாய்ப்பது அரசாங்கத்தின் கொள்கை. பலஸ்தீன விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சியில் இருந்தபோது தாங்கள் மேற்கொண்ட செயல்பாடு களில் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எவ்வித மாற்றமும் ஏற்பட வில்லை. அரச அதிகாரத்தைப் பெற்றுக் கொண் டதன் பின்னர் இராஜதந்திர ரீதியில் பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக தலையீடு செய்து வருகிறோம் - என்றும் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலி, பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லாம் ஆகியோர் பங்கேற்ற இந்தக் கலந்துரையாடலில் சுமார் 30இற்கும் மேற்பட்ட முஸ்லிம் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பருத்தித்துறை கடற்கரையில் கஞ்சாவுடன் நால்வர் கைது!

பருத்தித்துறை கடற்கரையில் கஞ்சா கடத்தலில் ஈடுபட்டிருந்த நால்வரை கைது செய்த கடற்படையினர், அவர்களின் இரு படகுகளையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை கடற்பரப்பில் ரோந்தில் ஈடுபட்ட காங்கேசன்துறை வடக்கு கடற்படை தள அதிகாரிகள் கரையில் சந்தேகத்துக்கு இடமாக இரு படகுகளை அவதானித்து அங்கு சோதனை செய்தனர்.

இதன்போது, 322 கிலோ 860 கிராம் கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், படகுகளில் இருந்த நால்வரையும் கைது செய்துள்ளனர்.

## டெங்கு...

46 சதவீதமானவர்கள் அங்கு பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் பொதுமக்கள் 24 மணி நேரமும் மருத்துவ உதவியை நாட முடியும். கர்ப்பவதி தாய்மார்களுக்கு காய்ச்சல், டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டால் 24 மணி நேரத்துக்குள் மருத்துவரை நாட வேண்டும் - என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இதனிடையே, டெங்கு, சிக்குன் குன்யா போன்ற நோய்கள் பரவுவதைத் தடுக்கவும், சமூக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும் நுளம்புகள் பெருகும் இடங்களை சுத்தம் செய்யுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எரிபொருள்களின்...

6 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலைய 293 ரூபாயாக அறிவிக்கப்பட் டுள்ளது. அத்துடன், 95 ஒக்ரென் பெற் றோல் லீற்றருக்கு 20 ரூபாய் குறைக்கப் பட்டு 341 ரூபாயாகவும் ஒட்டோ டீசல் லீற்றருக்கு 12 ரூபாய் குறைக்கப்பட்டு 274 ரூபாயாகவும் சுப்பர் டீசல் லீற்ற ருக்கு 6 ரூபாய் குறைக்கப்பட்டு 325 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் லீற்ற ருக்கு 5 ரூபாய் குறைக்கப்பட்டு 178 ரூபாயாகவும் உள்ளன.

இதேவேளை, ஐ. ஓ. சி. லங்கா நிறுவனமும் எரிபொருட்களின் விலை களை இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் விலை திருத்தத்துக்கு ஏற்ப மாற்றியமைத்துள்ளதாக அறிவித்துள்ளது. (ஐ)

## முன்னாள்...

முனீர் முலஃபர் தெரிவித்துள்ளார்.

மன்னார் - உப்புக்குளத்தில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இன்னும் சில தினங்களில் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நடைபெறவுள்ளது. நான் தற்போதைய ஒரு பிரதி அமைச்சர். நான் எனது வாகனத்தில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் "வி. ஐ. பி லைற்"றை பயன்படுத்தவில்லை. நான் தான் இந்தப் பகுதியின் அரசியல்வாதி என்று காட்டுவதற்காக "வி. ஐ. பி. லைற்"றை பயன்படுத்துகின்றனர். வேறு கட்சியை சேர்ந்தவர்கள் தாராபுரம் போனால் அடிப்பார்கள் என்று கூறினார்கள். நான் தாராபுரம் சென்றமை எவ்வித கலந்துரையாடலுக்கும் ,ல்லை.

இந்த நாட்டில் வன்முறை அரசியல் இல்லாமல் போகும். திருட்டு அரசியல் இல்லாமல் போகும். தற்போது நிறைய அரசியல்வாதிகள் பயந்து போயுள்ளனர். நிறைய பேரின் கோப்புகள் மேலே வந்துள்ளன. இந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தல் முடிவடைந்த பின்னர் சில முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. மக்கள் சொத்துகளை திருடியவர்கள், மக்களின் சொத்துகளை தவறாக பயன்படுத்தியவர்கள், மக்களை அச்சுறுத்தியவர்களுக்கு நாங்கள் நிச்சயமாக அதற்கான தண்டனையை வழங்குவோம்" - என்றார். (ஐ)

## அமெரிக்கா...

நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். இரு முடிவுகளும் நேர்மறையான முடிவுகளை தந்துள்ளன.

இலங்கை சார்பில் வாஷிங்டன் சென்ற தூதுக்குழு அமெரிக்க வர்த்தக பிரதிநிதி பணிமனையுடன் பேச்சு நடத்தியது. இந்தப் பேச்சு ஆக்கபூர்வமானதாக அமைந்தது. வணிக ஒத்துழைப்புக்கான முக்கிய பகுதியாக எரிசக்தி துறை அடையாளம் காணப்பட்டது. எரிசக்தி பொருட்களின் நிகர இறக்குமதியாளராக இருக்கும் இலங்கை எரிவாயு, கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் பிரிவுகளில் அமெரிக்க விநியோகஸ்தர்களுக்கு பரந்த வாய்ப்புகளை வழங்கவுள்ளது. இது இரு நாடுகளுக்கும் சாத்தியமான - விரைவான வெற்றி - என்றார்.

அத்துடன், இதற்கு இணையாக, இலங்கை பிரதிநிதிகள் குழு சர்வதேச நாணய நிதியத்துடன் வெற்றிகரமான கலந்துரையாடல்களை நடத்தியது. இது அரசாங்கத்தின் தயாரிப்பை மற்றும் முன்முயற்சி நிலைப்பாட்டை அங்கீகரித்தது. ஐ. எம். எவ்வின் சமீபத்திய செய்திக்குறிப்பு சமீபத்திய மதிப்பாய்விலிருந்து நேர்மறையான விளைவை குறிக்கிறது. இது அடுத்த தவணை நிதி உதவிக்கு வழி வகுத்தது -என்றும் கூறினார். (ஐ)

## இலங்கைக்கு...

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை நேற்று ஜனாதிபதியின் பணிமனையில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில்,

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும்இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது. தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்க கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துப்போகின்றன - என்று இதன்போது சார்ள்ஸ் வைட்லி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை அல்லது பொதுவான விருப்பத்தேர்வு முறை தொடர்பான 27 சர்வதேச இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க,

இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். இதேபோல், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ. எஸ். பி. பிளஸ் சலுகை இலங்கையின் ஏற்றுமதி துறைக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இலங்கை பொருளாதார ரீதியில் சரிவடைவதற்கு முன்னைய ஆட்சியாளர்களின் அரசியல் முறையும் வீண்விரயமும் மோசடியுமே காரணமாக அமைந்திருந்தன. இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருகிறது. அதற்கு சிறிது காலஅவகாசம் அவசியம். தற்போதைய அரசாங்கத்தின்மீது ஒட்டுமொத்த மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். முன்னைய அரசாங்கங்கள் தெற்கு சிங்கள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டன. ஆனால், இம்முறை வடக்கின் தமிழ் மக்கள், கிழக்கு முஸ்லிம் மக்கள் மற்றும் தெற்கு சிங்கள மக்களும் தற்போதைய அரசாங்கத்தை உருவாக்க ஆதரவளித்த னர். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் - என்றும் இதன்போது கூறினார் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# அரியாலை மனிதப் புதைகுழி அகழ்வு 15ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே. 01

**யாழ்ப்பாணம் - அரியாலை சித்துப்பாத்தி மயா னத்தில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் எதிர்வரும் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.**

அரியாலை மனிதப் புதைகுழி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் பிரதேச சபையின் பிரதிநிதிகள், சட்டமருத்துவ அதிகாரிகள், பொலிஸார், என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிட்ட தரப்புகள் கலந்து கொண்டனர்.

புதைகுழியை அகழ்வதற்கான நிதி மத்திய அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், மே மாதம் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி ஆய்வுப் பணிகளை முன்னெடுத்த, மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவ இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார். ஆதலால், அவர் எதிர்வரும் 3ஆம் திகதியளவில் அங்கு ஆரம்பகட்ட கள ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.

சித்துப்பாத்தி மயானத்தில் இருந்து இதுவரை மீட் கப்பட்ட 40 சிதிலங்களில் இரண்டு சிதிலங்கள் விலங் குகளின் என்புகள், ஏனைய அனைத்தும் மனித என்புத் தொகுதிகளுடன் தொடர்புடையவை என்ற விடயம் ஏற்கனவே நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்தூக்கி உடைந்து இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, மே. 01

காலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் உள்ள மின்தூக்கி உடைந்து விழுந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த கட்டடத்தில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் பணிபுரியும் அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தன்று, இந்த இளைஞர் குறித்த கட்டடத்தின் கீழ் மாடியிலிருந்து இரண்டாவது மாடிக்கு பொருட்களை கொண்டு செல்வதற்காக மின்தூக்கியில் சென்றுள்ளார்.

இதன்போது, மூன்றாவது மாடியில் இருந்த மின்தூக்கி திடீரென இளைஞனின் மேல் உடைந்து விழுந்துள்ளது.

காயமடைந்த இளைஞன் காலி தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்சாரக் கட்டணத்தை 50 வீதமாக அதிகரிக்குக!

## பொதுப் பயன்பாட்டு ஆணையத்திடம் இலங்கை மின்சார சபை முன்மொழிவு

கொழும்பு, மே. 01

ஜூலை மாதம் முதல் மின்சாரக் கட்டணங்களை சுமார் 50 வீதம் அதிகரிக்கவேண்டும் என்று இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாட்டு ஆணையகத்திடம் முன்மொழிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்த முன்மொழிவை முற்றிலுமாக நிராகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கலந்துகொண்ட இந்த சிறப்புக் கூட்டத்தின் போது, இலங்கை மின்சார சபை அதிகாரிகள் இந்த முன்மொழிவை முன்வைத்தனர். ஆனால் ஜனாதிபதி அதற்கு உடன்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படாவிட்டால் சபை நிதி ரீதியாக நிலையற்றதாகிவிடும் என்று மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியமும் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க பரிந்துரைத்துள்ளதாகவும் மின்சார சபை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருப்பினும், தற்போதைய நிலையில் மின்சாரக் கட்டணங்களைப் பராமரிப்பதால் நிதி ஸ்திரமின்மை ஏற்படாது என்று பொதுப் பயன்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ)

# ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு சிக்கல்நிலை

கொழும்பு, மே. 01

முன்னைய அரசாங்கங்களின் பதவிக்காலத்தில் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளில் முன்னைய காலங்களில் நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து தற்போது தனியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பின்னர் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேநேரம் குறித்த அதிகாரிகளுக்கு ஊழல், மோசடிகளை மேற்கொள்ள யாரேனும் அரசியல்வாதிகள் ஆதரவு வழங்கியிருந்தால் அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (அ)

# சுவிஸ் தூதரின் இல்லத்தில் தங்க நகைகள் கொள்ளை!

கொழும்பு, மே. 01

இலங்கைக்கான சுவிஸ் தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் உள்ள பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் நான்கரை மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட தங்க மோதிரங்கள், கழுத்தணிகள் மற்றும் பதக்கங்கள் திருடப்பட்டுள்ளதாக கொள் ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர் பில் சுவிஸ் தூதர் நேற்று முன் தினம் கொள்ளுப்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

சுவிற்சர்லாந்துக்கான இலங்கைத் தூதர் கடந்த 12 ஆம் திகதி சுவிற்சர்லாந்துக்குப் புறப்பட்டு, 27 ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பினார்.

இந்தக் காலகட்டத்தில், அவரது ஐந்து ஊழியர்கள் பணியில் இருந்தனர். கொள்ளுப்பிட்டி பொலிஸார் அந்த ஊழியர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

தனது அதிகாரபூர்வ இல்லத்தின் மேல் தளத்தில் உள்ள ஒரு அறையில் இருந்த ஒரு பெட்டகத்திலிருந்து வைர மோதிரம், உயர்ந்த இரத்தினக் கல் கொண்ட மோதிரம், திருமண மோதிரம், ரூபி கல் கொண்ட தங்க மோதிரம், தங்கப் பதக்கம், தங்கக் கடிகாரம் உள்ளிட்ட தங்கப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தூதர் முறைப்பாடு செய்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான அதிகாரிகள் குழு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (அ)

# வெப்ப எச்சரிக்கை குறித்து பரவிவரும் போலிச் செய்தி!

கொழும்பு, மே. 01

வெப்பநிலை 45 பாகை செல்சியஸாக அதிகரிக்கும் என சமூக ஊடகங்களில் தற்போது பரவி வரும் போலி செய்தியை வளிமண்டலவியல் திணைக்களம் மறுத்துள்ளதுடன் பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என வலியுறுத்தியுள்ளது.

வெப்பநிலை அதிகரிப்பதால் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு எந்தவொரு அறிவுறுத்தலும் விடுக்கப்படவில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டின் கல்வித்துறையை மாற்றியமைக்க வேண்டும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, மே. 01

சர்வதேச ரீதியாக இலங்கை பற்றி பேசக்கூடிய அளவில் எமது கல்வித் துறையை மாற்றியமைக்க வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பெலவத்தையில் அமைந்துள்ள இலங்கை பரீட்சைகள் திணைக்க ளத்தின் புதிய கட்டடம் ஒன்றைத் திறக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அடுத்த வருடம் கல்வியில் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் முதல் கட்டமாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு பரீட்சைகள் திணைக்களம் தலைமை தாங்க வேண்டும்.

காத்திரமாற்ற மாற்றத்தைக் கொண்டுவரும் நேரத்தில் அதற்கான குழுவொன்றை நாம் உருவாக்குதல் அவசியமாகும்.

எமக்கு இரண்டு சவால்கள் காணப்படுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள கல்வித் திட்டத்தின் பரீட்சைகள் நடைபெறும் அதேவேளை காத்திரமான மாற்றத்தையும் கொண்டு வரவேண்டும்.

பொறிமுறைக்கு எந்தவொரு தடையும் ஏற்படாத வண்ணமும் மாணவர்களுக்கு ஏதேனும் தடைகள் உருவாகாத வண்ணமும் அதனை செயற்படுத்த வேண்டும்.

ஆதலால் சம்பிரதாய முறையிலிருந்து விலகி எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் வித்தியா சமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் இதனைக் கட்டாயம் செய்ய வேண்டும்-என்றார். (அ)

# மே 5ஆம், 6ஆம் திகதிகளில் மூடப்படும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

கொழும்பு, மே. 01

உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகம் எதிர்வரும் 05 ஆம், 06 ஆம் திகதிகளில் மூடப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினத்தன்று, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தை வாக்களிப்பு நிலையமாக மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org